# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2091/2 - 2018 ඔක්තෝබර් මස 01 වැනි සඳුදා - 2018.10.01

*2091/2 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**நாணய விதிச் சட்டம்**

*திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் (இலங்கைச் சட்டவாக்க அமுலாக்கங்களின் 422 ஆம் அத்தியாயம்) 10(இ), 93, 94, 96 மற்றும் 97 ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி,*
*ஆளுநர்,*
*இலங்கை மத்திய வங்கி.*

*2018, ஒற்றோபர் 01.*

ஒழுங்குவிதி "ஈ"

***ஒதுக்குத் தேவைப்பாடுகள்***

*நாணயச் சபையினால் ஆக்கப்பட்டு 2013, ஏப்பிறல் 12 ஆந் திகதிய 1805/39 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 2013, யூன் 26 ஆந் திகதியிடப்பட்ட 1816/13 ஆம் இலக்க, 2015, திசெம்பர் 31 ஆந் திகதியிடப்பட்ட 1947/39 ஆம் இலக்க மற்றும் 2018, செத்தெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட 2089/28 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் மூலம் திருத்தப்பட்டவாறான ஒழுங்குவிதி "ஈ" 2018, ஒற்றோபர் 16 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது.*

ஒழுங்குவிதி 2(i) (அ) இல், " 'மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 35/01/005/0010/20 ஆம் இலக்க 2018, செத்தெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகளின் 100 சதவீதம்" என்ற இலக்கங்கள் மற்றும் சொற்களை நீக்கி அதற்கு,

“விடயத்திற்கு ஏற்றவாறு-

(i) “மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்” மீதான 35/01/005/0010/20 ஆம் இலக்க 2018, செத்தெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை அத்துடன்/அல்லது

(ii) ‘மோட்டார் வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்’ மீதான 35/01/005/0010/21 ஆம் இலக்க 2018, செத்தெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை

ஆகியவற்றில் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகள் 100 சதவீதம்” என்ற இலக்கங்கள் மற்றும் சொற்கள் பதிலீடு செய்யப்படுகின்றன”

ஒழுங்குவிதி 9 இல், பின்வரும் அட்டவணை “அ” மூலம் அட்டவணை “அ” பதிலீடு செய்யப்படுகின்றது’.

**அட்டவணை “அ”**

அறிக்கைப் படிவம்

**நாளாந்த சராசரி வைப்புப் பொறுப்புக்கள் அறிக்கை**

வங்கியின் பெயர் :.................................................................................................................................................................

(...................................................) தொடக்கம் (.......................................................) வரையான காலத்திற்கானது.
திகதி திகதி

சேரல் : பணிப்பாளர்,
உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு 01.

கீழே அறிக்கையிடப்பட்ட வைப்புப் பொறுப்புக்களின் சராசரித் தொகைகள் மேலே குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் ஒவ்வொரு தொழில் நாள் முடிவிலும் வங்கியின் ஏடுகள் மூலம் காட்டப்பட்ட வைப்பு மீதிகளை அடிப்படையாகக் கொண்டவை.

| (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|
| கேள்வி வைப்புக்கள் | கால மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகள் | அனைத்து ஏனைய வைப்புக்கள் பொறுப்புக்கள் [1] |
| | | | |

1. வைப்புச் சான்றிதழ் தொடர்பில் பிரகடனம் செய்யப்பட்ட தொகை செலுத்திய பெறுமதியாக இருக்க வேண்டும்.

**வேண்டப்படும் ஒதுக்குகள்**

........................................................ ஆரம்பிக்கின்ற காலப்பகுதிக்கானது.

| விடயம் | இலங்கை ரூபாவில் |
|---|---|
| 1. "விடயத்திற்கு ஏற்றவாறு-<br>(i) 'மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 35/01/005/0010/20 ஆம் இலக்க 2018, செத்தெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை ; அத்துடன்/அல்லது<br>(ii) 'மோட்டார் வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 35/01/005/0010/21 ஆம் இலக்க 2018, செத்தெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை ஆகிய சுற்றறிக்கைகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கெதிரான சராசரி நாளாந்த மொத்த எல்லை வைப்புக்களின் 100 சதவீதம்" | |
| 2. மேலே (1) நீங்கலாக சராசரி நாளாந்த மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களின் 7.5 சதவீதம் | |
| 3. மேலே (1) மற்றும் (2) இல் உள்ளடக்கப்படும் சராசரி வைப்புப் பொறுப்பு களுக்கு மேலதிகமாக வைத்திருக்கப்படும் இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளின் 2 சதவீதம், ஆயினும் 4 சதவீதத்தினை விஞ்சாதிருத்தல். | |
| 4. ஒதுக்குப் பேணுதல் காலத்தின் (1+2-3) மீது பேணப்படுவதற்கு வேண்டப்படும் மொத்த ஒதுக்குகள் | |

மேற்குறித்த கூற்று சரியானதென்றும் இவ்வங்கியிலுள்ள ஏடுகளுக்கமைவானதென்றும் மேலே காட்டப்பட்ட தொகைகள் இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைவானவை என்றும் நாம்/நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்/சான்றுப்படுத்துகின்றோம்.

திகதி :------------.

----------------,
உத்தியோகபூர்வ முத்திரை.

**குறிப்பு :**

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தவிர ஏதேனும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் மற்றும் இருப்புக்கள், குறித்துரைக்கப்பட்ட விகிதங்களில் வேண்டப்பட்ட ஒதுக்குகளின் பேணுகையாக கணக்கிற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) அனைத்துத் தொகைகளும் கிட்டிய ரூபாவில் காட்டப்பட வேண்டும்.

10-862

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.